உ

யாழ்நகர் — வண்ணை

வைத்தீஸ்வர சுவாமி கோயில்

அருள்மிகு தையல்நாயகி அம்பாள்

# திருப்பள்ளியெழுச்சி

— புலவர் ம. பார்வதிநாதசிவம்



ஆரணியே! அம்பிகையே! வாழிய நின் தாள்கள்!
அருள் நல்கும் பராசக்தி! வாழிய நின் தாள்கள்!
பூரணியே! பைரவியே! வாழிய நின் தாள்கள்!
புவனங்கள் தமை ஈன்றாய்! வாழிய நின் தாள்கள்!

# முன்னுரை

உலகமாதாவாகிய வண்ணை தையல்நாயகி அம்பாள் ஆருயிர்க் கிரங்கும் பெருங்கருணை வாய்ந்தவள். கருணைமிகுதியினால் வேண்டுவார்க்கு வேண்டுவனநல்கி, அவர் இடர் தீர்ப்பவள். அம்பாளை வழிபட்டால் இம்மையில் கல்வி, செல்வம், வீரமும் மறுமையில் முத்தியும் சித்திக்கும்.

வண்ணை தையல்நாயகி அம்பாளின் பெருங்கருணைக்கும் அற்புதங்களுக்கும் எத்துணையோ வரலாறுகள் உண்டு. கருணை மிகுந்த அம்பாளை வழிபடுவதன் மூலம் எம்மினம் இன்றைய அவலங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்பது சிறியேனது நம்பிக்கை. தொல்லை இரும்பிறவித்தளை நீங்கவும் அல்லல் அறவும் அன்னையின் பதம் தொழுவோம்.

இந்நூலில் உள்ள கவிதைகள் பத்தும் 'ஈழநாடு' பத்திரிகையில் தையல்நாயகி அம்பாள் திருவிழாக் காலத்தில் பிரசுரமானவை.

ம. பார்வதிநாதசிவம்

ஈழநாடு
ஆடித்திங்கள் 1986

சிவமயம்

விண்ணகத்தே செம்பரிதி ஒளியங்கள் தீட்ட
வியனுலகம் இருட்போர்வை தனைமெல்ல நீக்க
வண்ணமலர்த் தேனுண்டு வண்டுகளிபாட
மயிற்கூட்டம் தோகைவிரித்தே இனிதின் ஆட
வண்ணை யெனும் புனிதநகர் தனிற்கோயில் கொண்ட
வாலாம்பிகைத்தாயே! தையல்நாயகியே!
விண்ணமுதே விளங்கொளியே வேண்டுமடியார்தம்
வினைதீர்க்கும் பெருங்கடலே பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

காமாட்சி, மீனாட்சி, சாமூண்டி என்றும்
கருணைசெயும் ஐயை, சிவை, காயத்திரி என்றும்
நாமங்கள் பலகூறி அடியார்கள் வாழ்த்த
நற்கருணை பொழிகின்ற நாயகியே! அம்மா
தேமாவும் கதலிகளும் பலாவுமிக விளங்கும்
திருத்தலமாம் வண்ணைதனிற் கோயில் கொண்டவளே!
பாமேவும் கூழங்கைத் தம்பிரான் என்ற
பக்தனுக் கருள்செய்தாய் பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

சந்ததமும் தின்னவாம் தாளிணைகள் தொழுவோர்
    தன்குறைகள் தீர்க்கின்ற தையல்நாயகியே!
ஐந்தினுடன் இரண்டாய உலகுதனை ஈன்ற
    அருட்செல்வி சங்கரீ அவனிதொழு தேவீ!
பைந்தமிழை வளர்க்கவென்று சங்கமிருந் திட்ட
    பாலகனும் திருமுருகன் தனைப் பயந்த தாயே!
செந்தமிழர் இடர்அனைத்தும் சொல்லிஅழு கின்றோம்
    திரிபுரத்துச் சுந்தரியே பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

விருப்புடனே மலர்கொண்டு வழிபடுவோர் தங்கள்
வினைநீக்கி வீடுய்க்கும் மாகடலே! அருளார்
பொருப்பரசன் தவப்புதல்வி! நின்பாதம் தொழுதோம்
புவித்தலத்துன் பதம்தானே துணையென்று கண்டோம்
நெருப்பினிடைப் புழுவானோம் இனியுமிடர் ஆற்றோம்
நீதிவடி வானவளே வேண்டுதல்கள் செய்தோம்
திருப்பணிசெய் வைத்திலிங்கச் செட்டியார்க் கருள்செய்
செம்பொன்னே நம்தாயே பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

உனைப்போற்றக் கல்விதந்தாய்! மற்றவர்கள் தமக்கே
உதவவெனப் பொருள் தந்தாய்! நலிந்தோர்கள் தமக்கோ
இனைப்போதும் தாமதியா அதவிதனைச் செய்யத்
தீரத்தைத் தந்திட்டாய் அம்மாநீ! நாமோ
வினைப்பயனல் எய்துமிடர் விளக்கிடவும் ஆமோ?
வியனுலகைக் காப்பவளே தையல்நாயகியே!
வினைப்பெல்லாம நீயாக நாம்வணங்கல் செய்தோம்!
நீடுபுகழ் கொண்டவளே பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

வானூரும் கோபுரமும் மாமதிலுங் கொண்டே
    வண்ணைநக ரிடைவிளங்கும் ஆலயத்தின் கண்ணே
தேனூரும் கொன்றையணி சிவனாரின் துணையாய்த்
    திகழ்கின்ற தென்னமுதே! தையல்நாயகியே!
ஊனாகி உயிராகி உயிர்க்குயிராய் உள்ளாய்
    உன்பாதம் அல்லாமல் வேறுதுணை அறியோம்
வானோரும் உலகோரும் தம்குறைகள் சொல்லி
    வணங்குகிறார்! எம்தாயே பள்ளியெழுந் தருளாய்!

★ ★ ★

நல்லைநகர் ஆறுமுக நாவலனூர் செய்த
ஞானநெறிப் பிரசங்கம் தன்னை மிகநயந்தாய்
சொல்லரிய இலக்கண சுவாமிகள்மெய்ஞ் ஞானத்
தூயநிலை தனையெய்த அருள்புரிந்தாய் அம்மா!
தொல்லைவரும் பிறவியெனும் தளையறுத்தே என்றும்
தொண்டர்க்கு முத்திதரு வித்தகியே தாயே
எல்லமைந்த மலர்கொண்டே அடியார்கள் வணங்க
எம்பெருமான் தன்துணைவி! பள்ளியெழுந் தருளாய்!.

★ ★ ★

அற்புதங்கள் மிக்கோனாய் அருளாளன் தானாய்
அன்பார்ந்த சிந்தையனாய் யாவரையும் கவர்ந்த
பொற்புடைய தவயோகி சிவயோக சுவாமி
போற்றஅருள் புரிந்திட்ட தையல்நாயகியே!
உற்றபிணி தனைநீக்கி உயர்வுதனை நல்கும்
உன்பாதம் சரணடைந்தோம் பராசக்தி தேவி
கொற்றமெல்லாம் நல்குகின்ற மாதங்கி! அம்மா!
குவலயத்தே தொழுகின்றோம் பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

"ஈண்டினிய மானிடமாம் பிறப்பெடுத்தோம் எனினும்
எமதுநலன் ஏதென்றே நாமறியோம்" என்றே
வேண்டுகின்ற அடியார்க்கு வேண்டியன நல்கும்
வேதத்தின் உட்பொருளே! தையல்நா யகியே
தூண்டுமுயர் பக்தியினால் நின்னடியே தொழுத
தூயபெருங் குலத்துதித்த கண்ணம்மா ஆச்சி
நீண்டபெரும் திருப்பணியில் நின்னுள்ளம் மகிழ்ந்தாய்
நின்பாதம் தொழுகின்றோம் பள்ளிஎழுந் தருளாய்!

★ ★ ★

செந்நெல்லால் செழுங்கலையால் சேர்பொருளாற் கல்விச்
செல்வத்தால் ஞானத்தால் பண்பாட்டால் பாரில்
மன்னுபுகழ் வண்ணையெனும் தொல்பதியை மேவி
வழிபடுவோர் குறைநீக்கி அருள்புரியும் செல்வி!
தன்னிலைமை மன்னுயிர்கள் சார அருள் புரியும்
சக்தியென நூலோர்கள் போற்றுமுயர் தாயே
நின்னுடைய பதம்தொழுதோம் மங்களம்சேர் காலை
நித்திலமே! செம்பொன்னே! பள்ளியெழுந் தருளாய்!

★ ★ ★

ஈழநாடு வெளியீடு

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.,